அடையாள இலக்கம்:

D

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2019

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக** (5 புள்ளிகள்)

1. தமிழகராதி ____________ + ____________
2. மக்கட்பேறு ____________ + ____________
3. ஆதரவற்றவன் ____________ + ____________
4. மரமொன்று ____________ + ____________
5. முத்தமிழ் ____________ + ____________

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** (5 புள்ளிகள்)

1. சோம்பல் = ____________
2. மாளிகை = ____________
3. வாய்மை = ____________
4. வளர்பிறை = ____________
5. தோற்றம் = ____________

**(இ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிற் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

(10 புள்ளிகள்)

1) ஔவையார் ஒரு பெண் ________________________ .

2) தைப்பொங்கல் தினத்தை ________________________ எனவும் அழைப்பர்.

3) மின்விசிறி வேகமாக ________________________ ஆசிரியரின் மேசையிலிருந்த தாள்கள் பறந்தன.

4) நம்நாட்டில் ________________________ காலத்தில் பூக்கள் எல்லாம் பூத்துக்குலுங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

5) கோடை காலத்தில் காடுகள் ________________________ எரிவதனைத் தடுக்க அரசாங்கம் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றது.

6) யானைக்கு தும்பிக்கை பலமாக இருப்பது போல மக்களுக்கு ________________________ பலமாக இருக்கிறது.

7) மனிதனிடம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ________________________ உள்ளன.

8) இயல், இசை, நாடகம் ________________________ எனக் கூறப்படும்.

9) பெற்றோரை ________________________ என்பது தமிழர்களது உயர்ந்த அறங்களில் ஒன்றாகும்.

10) தற்போது இணையம்வழி கலைகளைப் பற்றிய ________________________ பெற்றுக்கொள்ளலாம்.

**(ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொற்களின் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. குதிரையைப் போலத் தோற்றமளிக்கும் கழுதை, ஓட்டத்தில் குதிரைக்கு **ஈடாகுமா**?
   அ. இணையாகுமா? ஆ. வேகமாகுமா? இ. பொறுப்பாகுமா? ஈ. பலமாகுமா?
2. விஜயனின் **மதிநுட்பத்தை** எல்லா ஆசிரியர்களும் பாராட்டினர்.
   அ. திறமையை ஆ. வலிமையை இ. புலமையை ஈ. நுண்ணறிவை
3. பூகம்பம் ஆயிரக்கணக்கான உயிர்களுக்குப் **பேரிடர்** விளைவிக்கிறது.
   அ. பெரும்துன்பம் ஆ. பெரும்நஷ்டம் இ. பெரும்சேதம் ஈ. பெரும்பாதகம்
4. மல்லிகா தினந்தோறும் பள்ளிக்குக் காலதாமதமாக வருவது **வாடிக்கையாகி** விட்டது.
   அ. நடைமுறையாகி ஆ. தெரிந்ததாகி இ. உறுதியாகி ஈ. வழக்கமாகி
5. எத்தனை உறவுமுறைகள் இருந்தாலும் தாய்க்கு **நிகரான** உறவுமுறை இருக்க இயலாது.
   அ. உயர்வான ஆ. சமமான இ. சிறப்பான ஈ. அன்பான
6. அறிவுடன் அன்பும் **பணிவும்** மிக்க ஒருவரால்தான் வாழ்வில் உயர்வு பெறமுடியும்.
   அ. அடக்கமும் ஆ. இரக்கமும் இ. நம்பிக்கையும் ஈ. ஆர்வமும்
7. மேலும் மேலும் புதியனவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற **வேட்கைதான்** பல கண்டு பிடிப்புகளுக்குக் காரணமாகும்.
   அ. முயற்சிதான் ஆ. நாட்டம்தான் இ. துணிவுதான் ஈ. அறிவுதான்
8. மறந்தும் பிறருக்கு நாம் **தீங்கு** செய்யக்கூடாது.
   அ. நன்மை ஆ. தீமை இ. சிறுமை ஈ. கடுமை
9. நமக்கு வாழ்க்கையில் பல **இடுக்கண்கள்** வந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் உழைத்து முன்னேறவேண்டும்.
   அ. செயல்கள் ஆ. தடைகள் இ. துன்பங்கள் ஈ. கட்டுப்பாடுகள்
10. அன்னை திரேசாவின் தன்னலமற்ற தொண்டுக்கு இந்த **ஞாலமே** தலை வணங்கியது.
    அ. நாடே ஆ. உலகமே இ. கண்டமே ஈ. இயற்கையே

**(உ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.** (20 புள்ளிகள்)

அ. **அலகு :** ……………………………………………………………………………

……………………………………………………………………………….

**அழகு** : ……………………………………………………………………….

……………………………………………………………………………….

ஆ. **வெல்லம் :** ……………………………………………………………………

……………………………………………………………………………….

**வெள்ளம் :** ……………………………………………………………………

……………………………………………………………………………….

இ. **தனி :**…………………………………………………………………

……………………………………………………………………………….

**தணி** :…………………………………………………………………

……………………………………………………………………………….

ஈ. **பலம் :**……………………………………………………………………..

……………………………………………………………………………….

**பழம் :**…………………………………………………………………..

……………………………………………………………………………….

உ. **திரை** :……………………………………………………………………

……………………………………………………………………………….

**திறை** :……………………………………………………………………

……………………………………………………………………………….

## <u>பகுதி 2</u>

**(ஊ) பின்வரும் உரைப்பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதன்பின்னர் கீழ்க்காணும் வினாக்களுக்கு உங்கள் சொந்த வசனங்களில் விடையெழுதுக. (25 புள்ளிகள்)**

‘தன் கையே தனக்கு உதவி’ என்பது ஒரு பழமொழி. தன் முயற்சியாலேயே ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பது இதற்குப் பொருளாகும். தன் கையின் அமைப்பே தன் வாழ்க்கைக்கு உதவியாக விளங்கும். அதை கவனித்துக்கொண்டு வாழ்க்கையை நடத்தினால் நன்றாக வாழலாம் என்பது மற்றொரு நுட்பமான பொருளாகும். கையின் அமைப்புக்கும் ஒருவரது உயர்வு தாழ்வுக்கும் நெருக்கமான தொடர்பிருக்கிறது என்பதை நம் முன்னோர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள் என்பதற்கு இப்பழமொழியே காரணமாகும்.

ஒரு புத்தகம் போல படித்துத் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படி மனிதன் கை அமைந்துள்ளது. இந்தக் கையைக் காட்டிலும் இந்த மூன்று உலகங்களிலுமே அறியக்கூடிய அறிவென்று குறிப்பிடக்கூடியது வேறு எதுவுமே இல்லை என்று சொல்லப்படுகின்றது.

உடலமைப்புக்கும் ஒருவனுடைய ஆற்றலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இதை அனுபவத்தால் அறிகின்றோம். இப்படியே உடலமைப்புக்கும் உணர்வுகளுக்கும் தொடர்பு உள்ளதென்பதும் சிறிது ஊன்றிக் கவனித்தால் புரியும். மனிதனின் செயல்கள், உடலும் மனமும் சேர்ந்து கூட்டாக நடத்துகின்றவையே. ஆகவே ஒருவனின் மனப்போக்குக்கும் அவன் உடல் உறுப்புகளுக்கும், அதிலும் குறிப்பாக அவன் கைக்கும் நெருங்கிய தொடர்பு உறுதியாக உண்டு என்றும், கையைக் கவனித்தே ஒருவனைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம் என்றும் சொல்வதில் எந்த அறிவியலார்க்கும் மாறுபட்ட கருத்தோ மனக்குழப்பமோ இருக்க முடியாது.

இந்தியாவில் தோன்றிய இந்த அபூர்வமான கைரேகைக் கலை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே உலகெங்கும் சென்று பரவியுள்ளது. இதைப் பரப்பியவர்களில் ‘ஜிப்சிகள்’ எனப்படும் நாடு சுற்றி வாழும் இனத்தார்கள் மிகவும் முதன்மையானவர்கள். அவர்களுக்கு அடுத்த படியாக கிரேக்க மேதையான அரிஸ்டாட்டில் மிகவும் முதன்மையானவர். ‘சமுத்திரராஜனால் சொல்லப்பட்டது’ என்ற சிறப்புடன் நம் நாட்டிலும் இந்தக் கலையின் சிறப்பு நம் முன்னோர்களால் போற்றப்பட்டது. ‘சாமுத்திரிகா இலட்சணம்’ என்ற பெயருள்ள நூலும் வழக்கில் இருந்து வருகிறது.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. ‘தன் கையே தனக்கு உதவி’ – என்ற பழமொழிக்கு இந்த வாசிப்பு பகுதியிலே குறிப்பிடப்பட்ட இருவேறு கருத்துக்களை எழுதுக.

2. கையின் அமைப்பையும் வாழ்க்கையையம் தொடர்பு படுத்தும் விடயங்கள் எவை?

3. உடல், மனம், மனிதனின் செயல்கள் இவைபற்றி என்ன கூறப்பட்டுள்ளது?

4. கைரேகைக் கலை உலகெங்கும் பரவிய விதம், காலப்பகுதி பற்றி என்ன கூறப்பட்டுள்ளது?

5. கைரேகைக் கலையின் சிறப்பு எவ்வாறு போற்றப்பட்டுள்ளது?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**(எ) கீழே தரப்பட்ட குறிப்புக்களை வாசித்து அதற்கமைய ஒரு கடிதத்தையோ அல்லது ஒரு கட்டுரையையோ எழுதுக.**

(25 புள்ளிகள்)

தமிழ் மக்களிடையே கலையுணர்வை வளர்க்க வேண்டியதன் தேவையையும் அதற்கான வழிமுறைகளும் என்ற தலைப்பில சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக 200 சொற்களுக்குக் குறையாத கட்டுரை ஒன்றை எழுதுக.

அல்லது

நீ ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிடுகிறாய் என்று உனது தோழனுக்கு அல்லது தோழிக்கு ஒரு கடிதம் ஒன்றினை 200 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

**விடைத்தாள் - ஊ)**

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………